# பத்திரிக்கை செய்தி

கடலூர் மாவட்டம், அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் ரூபாய் 1 கோடி 30 லட்சத்திற்கு மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள கடந்த 14.07.2023 அன்று அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த பணிகளை மேற்கொள்ள அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் திரு.ஜானகிராமன் (அதிமுக) அவர்கள் சில குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்களுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்துள்ளார். அந்த பணிகளை செய்யும் ஒப்பந்ததாரர்கள் அனைவரும் சேர்ந்து ஒன்றியக் குழு தலைவர் திரு.ஜானகிராமன் அவர்களுக்குண்டான கமிஷன் தொகையை கொடுக்க இருப்பதாகவும், அந்த கமிஷன் தொகையை அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஒப்பந்தபணி கிடைக்க பெறாத கவுன்சிலர்களுக்கு பிரித்து கொடுக்க இருப்பதாகவும் தகவல் கிடைக்க பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ந.தேவநாதன் தலைமையிலான குழுவினர் அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள ஒன்றிய குழு தலைவர் அறையில் இன்று 19.07.2023 மதியம் 01.00 மணிக்கு திடீர் என உள்ளே நுழைந்து சோதனை செய்தனர். சோதனையின் போது ஒன்றிய குழு தலைவர் திரு.ஜானராமன், ஒன்றிய கவுன்சிலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து கமிஷன் தொகையாக கணக்கில் வராத பணம் ரூ.3,09,000/– கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத லஞ்ச பணம் குறித்து ஒன்றிய குழு தலைவர் திரு.ஜானராமன் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.